உ

முருகன் துணை.

திருப்போரூர்

# சுப்பிரமணியர்.

# வருகைப்பத்து.

இஃது

மதுரைவித்வான்

## த. குப்புசாமிநாயுடு அவர்கள்

இயற்றியதை

ஷை யார் மருமகன்

## M. பாலுசாமிநாயுடு முயற்சியால்

மதுரைதிண்டுக்கல்ரோட்

மகமதியன்பிரசில்பதிப்பிக்கப்

பெற்றது.

1913

OFFICE OF THE REGISTRAR
MADRAS
797

600 008
171357
649
2294.551

உ

முருகன் துணை.

திருப்போரூர்.

## சுப்பிரமணியர்.

# வருகைப்பத்து.

பொன்னே வருக நால்வேதப் பொருளே வருக
அருளுதவும்-புனிதா வருக இனிதாமைப் புயலே
வருக புயற்குள்நின்ற, மின்னே வருக மெய்ஞ்ஞான
விளக்கே வருக நினைத்தவர்வல்-வினை தீர்த்தருளி யெ
னையாளும் விமலா வருக கமலைபுகழ், அன்னோர்
கூந்தற் கன்னிவள்ளிக் கன்பா வருக வும்பருக்கும்-
அரசே வருக மூலமென வத்தி யழைக்க முத்திதர,
முன்னேகியமால் மருகனெங்கள் மூர்த்தி வருக வருக
வே-முதல்வா சமர புரிவாழும் முருகா வருக வருகவே.

வேலா சீலா வருக முத்தி வித்தே சித்தே வ
ருக சதுர்-வேதா நீதா வருக மயில் வீரா சூரா வரு
கவனு, கூலா மேலா வருக பரங் குன்றுள் கின்றாய்

OFFICE OF THE REGISTRAR OF ... REGISTERED 10 SEP 1913 MADRAS.

வருகமறைக்-கொழுந்தே செழுந்தேன் கடம்பணிந்த
கோவே தேவே வருகவிந்த்ர, ஜாலர் லோலா வருக
சடாட்சரனே பரனே வருகநிறை-தவமே சிவமே வரு
கசம்ப்ர தாயா நேயா வருகமந்த்ர, மூலா பாலா • ஞா
னசிவ மூர்த்தி வருக வருகவே-முதல்வா சமர புரிவா
ழும் முருகா வருக வருகவே. (2)

பாகா மழலை மொழிக்குறப்பெண் பாகா வருக
கதிர்வடிவேற்-படையாய் வருக வெணையினிமேற் ப
டையாய் வருக அடியவர்கள், வாகா வெனவே வண்
ணமயில் வாகா வருக கூர்கொள்வடி-வாளாம் விழி
த்தெய் வானைமண வாளா வருக மிகநாக,ரீகாவருக
பாதபுண்ட ரீகா வருக வழுதருஞ்சங் - நிதியே இ
றைஞ்சித் துதிசெய்தயா நிதியே வருக தமிழ்க்கதிக,
மோகா வருக வாதுதகு மோர்கா வருக வருகவே-
முதல்வா சமர புரிவாழும் முருகா வருகவருகவே.

நித்தர் துதிக்கும் பழவடியார் நெஞ்சத் திட
ராம் பஞ்சினுக்கோர்-நெருப்பே வருக பொருப்ப

னைத்தும் நின்றாய் வருக குன்றாத, சத்தம் பரிசம் ரூபரசங் கந்தம் தருமைம் புலனொளிருஞ் - சடத்து மண்டத் திடத்துமமர் தலைவா வருக குரவையிட்டு வித்தும் பழனஞ் செங்நெலுக்கு விரைத்தேன் பாச்சு மள்ளர்கள் நெல்-விலைக்குச் சூற்கொள் சங்கீன்ற வெள்ளி யனைய தெள்ளியவெண், முத்தமளக்குந் திருப்போரூர் மூர்த்தி வருக வருகவே - முதல்வா சமரபுரிவாழும் முருகா வருக வருகவே. (4)

கந்தா வருக புண்க்குறத்தி காந்தா வருக பன்னிரண்டு-கையா வருக கனகதண்டைக் காலா வருக வாலையருள், மைந்தா வருக நந்தாத வாழ்வே வருக தாழ்வில்சிந்தா-மணியே வருகப் பிணிதீர்க்கும் மருந்தே வருக மந்தியுந்தித், திந்தா வெனக்கை யாற்பலவின் செழுங்கா யெனுமத் தளமுழக்கத் தேமாங் குயிலொத் திசைப்ப வண்டு செழும்பண் பாட மயிலாடும், முந்தா டரங்காஞ் சோலைமலை மூர்த்தி வருக வருகவே- முதல்வா சமர புரிவாழும் முருகா வருக வருகவே. (5)

வன்பேய் பில்லி சூனியங்கள் வலிய கொடிய நோய்களினல்-வருந்து மெவரும் நினதுபெயர் வழுத்திற்றுயரம் பறந்தரிய, இன்பே யடைவ ரெனவ றிஞ ரிசைக்கக் கேட்டிங் கெனைச்சார்ந்தோர்க்-கிருக்குங் கொடிய பலபிணிக ளிடையூறுகும் பழவினையின், துன்பே யகல வருள்புரியத் துதித்தேன் செந்தூர் சுகவரத -துரையே கிருபைக் கடற்பெருக்கே சொல்லற் கரிய மாதவர்கள், முன்பேவந்தாயதுபோலென் மூர்த்தி வருக வருகவே - முதல்வா சமர புரிவாழும் முருகா வருக வருகவே. (6)

இனிக்குங் கரும்புந் துவர்க்கரஞ்சித் திருக்குமுனது திருப்புகழை - இருகா தாரக்கேட் டுருகாரியமன் பாசத் தயர்வரெனத், தொனிக்குஞ் சேவற்கொடிபடைத்த துரையே வருக கணபதிக்குத்- துணைவா வருக ஆதிபரஞ் சுடரே வருக சரவணத்திற் செனிக்கும் பால சுப்பிரமண்ய தேவா வருக தேவருக்குஞ் - சேவை கொடுக்கும் திருப்பழனி செவ்வேள்வருக தென்பொதிகை, முனிக்குங் குருவாய

னுக்ரகித்த மூர்த்தி வருக வருகவே- முதல்வா சமர
புரிவாழும் முருகா வருக வருகவே. (7)

செப்பாங் தனமும் விழிவேலுஞ் செறியு மளக
விருட்காடுஞ்-சிறக்கக்காட்டி மயக்குமின்னார் திறத்
தின் மயலைக் கடந்தவர்கள், ஒப்பா யில்லா வொளி
மணியே யுயர்வா மரிய விரத்தினமே- உள்ளே உள்
ளக்கனிகனியே யோங்குஞ் சுவையே பசுந்தேனே,
இப்பார் முழுதுந் தொழுதுநிற்கு மெழிலே பாகே
கற்கண்டே- என்று வருந்தித் துதிக்கவவர்க் கெல்
லாவருளுந் தந்தாளும், முப்பால் ஞானவருட்கருணை
மூர்த்தி வருக வருகவே- முதல்வா சமரபுரிவாழும்
முருகா வருக வருகவே. (8)

பொருகார் முகத்தைப் பொருவுகரும் புருவப்
பருவத் தெரிவையரைப்- புல்கத் திருத்திக் கலவை
யள்ளிப் பூசிப் பேசிக் கூசியவள். ஆருங்கா யிருந்தி
மடித்தசுரு ளருத்தி மடிமே லிருத்திகுய-மதனை நெ
ருடிபதம் வருடி யணைக்குந் தொழிலே நினைப்பத
ன்றி, ஒருகாலமுமுன் றனைப்பணிதற் குருகாமனவஞ்

171357

சகத்தெனையும்- உன்னுளெனக் கொண் டென்னுளு முவந்தாய் வருகச் சுகந்தமுந்த, முருகார் கடம்பத் தடம்புயத்து மூர்த்தி வருக வருகவே- முதல்வா சமர புரிவாழும் முருகா வருக வருகவே. (9)

வானாய் நீராய் வளியனலாய் மண்ணாயன்ப ருயி ர்க்குயிராய்- மறையாய் மறையின் பொருளாய்ச் சன் மார்க்க முடையார் மனத்தினுக்குள், தேனாய்ப் பாகாய்க் கரும்பாகித் தெவிட்டாக் கனியாய்த் தெ ள்ளமுதாய்த்- தித்தித்தவர்கள் கருத்தினிற்குஞ். செ யல்களெவையுஞ் சித்திக்கத், தானா யருளுஞ் சற் குருவாய்த் தமராயடியர் பகைஞருக்குச்- சமனாய்க் கருணைக் கொருமலையாய்ச் சாற்றுந் திருவேரகத் தில்வளர்; மோனாய்ப் பரமற் குபதேச மூர்த்திவருக வருகவே- முதல்வா சமர புரிவாழும் முருகா வரு க வருகவே. (10)

திருப்போரூர்

**சுப்பிரமணியர் வருகைப்பத்து.**

**முற்றுப்பெற்றது.**

171357